பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 11 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருவது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. போலிச் செய்திகள் பரப்பப்படுவதை தடுப்பதில் பத்திரிகை தகவல் அலுவலகம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. திமுக ஆட்சிக் காலத்தில்தான் கூட்டுறவுத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் பால் விலை, மின் கட்டணம் மற்றும் சொத்துவரி உயர்த்தப்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. பஹ்ரைன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் கவின் தங்கம் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருவது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், இந்த இயக்கத்தில் மேலும் பலர் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்ய இது உதவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ், வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாக அமைச்சர் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

<<<>>>

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் ஊடகங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தேசிய பத்திரிகை தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

விடுதலைப் போராட்ட காலத்திலும், அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்ட நேரத்திலும் ஊடகங்கள் முக்கியப் பங்கு வகித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன், போலிச் செய்திகள் பரப்பபப்படுவதைத் தடுப்பதில், பத்திரிகை தகவல் அலுவலகம் முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார்.

இதற்கென தனிப்பிரிவு ஒன்று இந்த அலுவலகத்தில் செயல்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜாஜு இந்த நிகழ்ச்சியில் பேசுகையில், நாட்டின் ஒற்றுமைக்கான தூதுவராக ஊடகங்கள் திகழ்கிறது என்று கூறினார்.

ஊடகத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் திரு. சஞ்சய் ஜாஜு எடுத்துரைத்தார்.

<<<>>>

காதி பொருட்களின் வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிறு குறு தொழில்துறை அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் காதி அரங்கை திறந்து வைத்து அவர் பேசினார்.

கைவினைக் கலைஞர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இதில் காட்சிபடுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் பயன்பெறுவதற்கான இணையதளத்தில் இதுவரை 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கான இணையதளப் பதிவு தொடங்கப்பட்ட 3 வாரத்தில் மட்டும் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இதில் பதிவு செய்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை 9 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைக்கு இந்த திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 4 ஆயிரத்து 800 பேர் பயனடைய உள்ளதாகவும், இதில் ஆயிரத்து 400க்கும் மேற்பட்டோர் பெண்கள் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

திமுக ஆட்சிக் காலத்தில்தான் கூட்டுறவுத்துறை மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

நெல்லை பாளையங்கோட்டையில் கூட்டுறவு வார விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்று கலந்துகொண்டு அவர் பேசினார்.

பெண்களுக்கான பால் வளக் கூட்டுறவு சங்கங்களை திமுக அரசுதான் உருவாக்கியதாக அவர் குறிப்பிட்டார்.

அனைத்து தரப்பினரும் பயன்பெறும் துறையாக கூட்டுறவுத்துறை திகழ்கிறது என்றும் திரு. கே.என். நேரு கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் இன்றும் நடைபெற உள்ளன.

மாநிலம் முழுவதும் வாக்குச்சாவடி மையங்களில் இந்த முகாம்கள் நடைபெற உள்ளன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், இடமாற்றம் உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இந்த முகாம்களில் பெறப்படுகின்றன.

இதுபோன்ற முகாம்கள் வரும் 23 மற்றும் 24ஆம் தேதிகளிலும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் பால் உள்ளிட்ட ஆவின் பொருட்கள், மின்சாரம், சொத்துவரி போன்றவை உயர்த்தப்பட்டுள்ளதாக பிஜேபி மகளிர் அணி தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இது தொடர்பாக விடுத்துள்ள செய்தியில், ஆவின் ப்ரீமியம் பாலின் விலை 25 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சொத்துவரி 50 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணமும் 2 புள்ளி ஒன்று எட்டு சதவீதம் உயர்ந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது விலைவாசி உயர்வைக் கண்டித்துப் போராடும் திமுக, ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் கட்டணங்களை உயர்த்துவதாக கூறியுள்ள திருமதி வானதி ஸ்ரீனிவாசன், இதுதான் திமுக அரசின் சாதனையா என்று வினவியுள்ளார்.

<<<<>>>>

சட்டக் கல்லூரி உதவிப் பேராசிரியர் பணிக்கான வயது வரம்பை 59ஆக உயர்த்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உதவிப் பேராசிரியர் பணிக்கான போட்டித் தேர்வை உடனடியாக நடத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஏற்கனவே அறிவித்தவாறு இதற்கான அறிவிக்கையை இம்மாத இறுதிக்குள் ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட வேண்டும் என்றும் திரு. ராமதாசு கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதியில் பெய்த மழை காரணமாக பெரியாறு நீர்வீழ்ச்சியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குற்றால அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்றிரவு பரவலாக மழை பெய்தது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய் 71 டாலராக உள்ளது.

------------

ஆஸ்திரேலியா – அமெரிக்கா - ஜப்பான் இடையே பாதுகாப்பு தொடர்பான முத்தரப்பு பேச்சுவார்த்தை இன்று தொடங்குகிறது.

------------

தென்னாப்பிரிக்காவில் சுகாதாரமின்றி செயல்படும் உணவகங்களை மூட அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

------------

சீனாவில் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

------------

இஸ்ரேல் மீது நடத்திய ட்ரோன் தாக்குதலுக்கு ஈராக்கில் உள்ள தீவிரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது.

------------

இலங்கை நாடாளுமன்றத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான 3 நாள் பயிலரங்கு வரும் 25ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

ஜம்மு-கஷ்மீரின் 393 பஞ்சாயத்துகளில் கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது.

------------

மத்தியப்பிரதேச மாநில அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரி மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக 4 பேரை அம்மாநில காவல்துறை கைது செய்துள்ளது.

------------

பெரம்பலூர் மாவட்டம் துறைமங்கலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் ஊட்டச்சத்து பெட்டகங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

------------

கரூர் பேருந்து நிலையத்தில் இருந்து புதிய வழித்தடங்களில் 5 பேருந்துகளின் சேவையை மாநில அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி நேற்று தொடங்கி வைத்தார்.

------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

பஹ்ரைன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் கவின் தங்கம் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-19 என்ற செட் கணக்கில் ஈரானின் **Ali Hayati**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Prakriti Bharath** 21-9, 20-22, 21-19 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Prerana Shet**-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் **Annanya Pravin - Prerana Shet** இணை 21-14, 21-12 என்ற செட் கணக்கில் இலங்கையின் **Isuri Attanyaka – Sithumi De Silva** இணையை வென்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

------------

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

பீஹாரின் **Rajgir**-ல் இப்போட்டி மாலை மணி 4.45க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**